**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன்– 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கான 25 இல்லங்களுக்கு 2013–14 ஆம் ஆண்டிற்கு திட்டத் தொடராணை மற்றும் உணவூட்டு மானியம் ரூ.650/– ஆக உயர்த்தி வழங்குதல் – நிதி ஒப்பளிப்பு செய்வது–ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.14

நாள்:13–03–2014
விஜய, மாசி 29,
திருவள்ளுவர் ஆண்டு 2045
படிக்க:

1. அரசாணை(நிலை) எண்.107, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 17–10–2012.
2. முதன்மைச் செயலாளர்/ மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கடிதம் எண்.3605/மா.தி.ந.2.1/2013, நாள் 27.6.2013.

--------

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 2012–2013 ஆம் ஆண்டிற்கு, 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கான ஏழு இல்லங்களுக்கென ரூ.62,35,600/– தொகையும், ஆண்களுக்கான 10 இல்லங்களுக்கென ரூ.87,08,000/– தொகையும், பெண்களுக்கான 10 இல்லங்களுக்கென ரூ.87,08,000/– தொகையும், ஆக மொத்தம் 27 இல்லங்களுக்கு திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்திட ரூ.2,36,51,600/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. முதன்மைச் செயலாளர்/ மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தமது கடிதத்தில், 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கான ஏழு இல்லங்களுக்கென ரூ.69,07,600/– 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றிய ஆண்களுக்கான 10 இல்லங்கள் மற்றும் பெண்களுக்கென தனியாக தொழிற்பயிற்சியுடன் கூடிய 10 இல்லங்களுக்கு ஒரு இல்லத்திற்கு ரூ.9,66,800/– வீதம் 20 இல்லங்களுக்கு ரூ.1,93,36,000/– மேற்காணும் மொத்த செலவினம் ரூ.2,62,43,600/– ஐ 2013–14 ஆம் நிதியாண்டிற்கு இத்திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்த ஏதுவாக நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

3. முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கென ஏற்கனவே செயல்பட்டு வரும் 7 இல்லங்களுடன் 14 வயதிற்கு மேற்பட்ட தொழிற்பயிற்சியுடன் கூடிய ஆண்களுக்கான 10 இல்லங்களும் மற்றும் பெண்களுக்கான தனியாக தொழிற்பயிற்சியுடன் கூடிய 10 இல்லங்களும் என மொத்தம் 27

இல்லங்களில் திண்டுக்கல் மாவட்டம் இனிய உதயம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம் அனுகிரகா ஆகிய இரண்டு தொண்டு நிறுவனங்கள் நீங்கலாக மீதமுள்ள **25** தொண்டு நிறுவனங்களை, **2013–14** ஆம் ஆண்டு தொடர்ந்து செயல்படுத்த, இவ்வாணையின் இணைப்பு I முதல் III ல் கண்டுள்ளவாறு, ஆறு மனவளர்ச்சி குன்றியோருக்கான இல்லங்களுக்கான செலவினத் தொகை ரூ.**59,20,800/–** மற்றும் **14** வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றிய ஆண்களுக்கான **10** இல்லங்கள் மற்றும் பெண்களுக்கான தனியாக தொழிற்பயிற்சியுடன் கூடிய **9** இல்லங்கள், என **19** இல்லங்களுக்கு செலவினத் தொகையாக ரூ.**1,83,69,200/–** என மொத்தம் ரூ.**2,42,90,000/–** (ரூபாய் இரண்டு கோடியே நாற்பத்து இரண்டு இலட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும் ) நிதி ஒப்பளிப்பு செய்தும், மேலும், இவ்வில்லங்களில் தங்கி உள்ளோருக்கு வழங்கப்படும் உணவூட்டு மானியத்தை ரூ.**450/–**லிருந்து ரூ.**650/–** ஆக உயர்த்தி வழங்கவும் அரசு ஆணையிடுகிறது.

**4.** மேலே ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்காணும் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> “**2235**–சமூகப் பாதுகாப்பும் நலனும்–**02**–சமூக நலன்–**101**–மாற்றுத் திறனாளிகள் நலன் – பன்னிரெண்டாம் ஐந்து ஆண்டுத் திட்டப் பணிகள் II மாநிலத் திட்டம்–MG– மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்பு நிலையங்களுக்கான புகழ்வாய்ந்த அரசு சாரா அமைப்புகளுக்கு நிதியுதவி –**09.** உதவித் தொகை–**01.** நடப்புச் செலவுக்கான உதவித் தொகை”.
> (த.தொ.கு **2235–02–101**–MG–**0914**)

**5.** (i) மாவட்ட ஆட்சியரால் பரிந்துரைச் செய்யப்படும் தகுதி வாய்ந்த தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் மனவளர்ச்சி குன்றியோருக்கான இல்லங்கள் செயல்பட தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

(ii) தன்னார்வ தொண்டு நிறுவனங்களை தேர்ந்தெடுத்தல் மற்றும் நீக்கும் அதிகாரமும், மேலும், புதிய இல்லங்கள் தொடங்குவதற்கான மாவட்டங்களை தேர்ந்தெடுத்தல் மற்றும் நீக்குவது தொடர்பாக, அரசின் ஒப்புதலைப் பெற்று செயல்படுத்துமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(iii) மேலே பத்தி **3**–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையை பெற்று உரிய தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு வழங்க மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அதிகாரமளிக்கப்படுகிறது

**6.** மேலே பத்தி **3**–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ரூ.**2,42,90,000/–**ல் உணவூட்டு மானியம் உயர்த்துவதால் ஏற்படும் செலவினம் ரூ.**24,00,000/–** மட்டும் ஒரு “புது துணைப்பணி” குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்பார்த்து, இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக பெற்று செலவிடப்பட வேண்டும். இதற்கான ஆணைகள் நிதி(வரவு செலவு பொது **1**) துறையால் தனியே வெளியிடப்படும். எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணத்தைப் பெற தேவையான விண்ணப்பத்தை வரையறுக்கப்பட்ட படிவத்தில் இவ்வரசாணை நகலுடன் நிதி (வரவு–செலவு பொது–**1**)த் துறைக்கு விண்ணப்பிக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர்

கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை சட்டப் பேரவையின் சிறப்பு கவனத்திற்கு கொண்டு வரும் பொருட்டு 2014–15 ஆம் ஆண்டு துணை மானியக் கோரிக்கையில் சேர்ப்பதற்குரிய கருத்துருவினை உரிய தருணத்தில் தக்க விளக்கக் குறிப்புடன் நிதி(வ.வெ.பொ.1)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.12880/நிதி(சந)/14, நாள் 10.3.14–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
தலைமைக் கணக்காயர், சென்னை–18.
தலைமைக் கணக்காயர், சென்னை– 18. (பெயரில்)

<u>நகல்:–</u>
நிதி (சந/ வ.செ.பொ.I/வ.செ.பொ.II) துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, அனைத்துப் பிரிவுகள்.
இருப்பு கோப்பு/உதிரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு–I

(அரசாணை(நிலை) எண்.14, மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை, நாள்13–03–2014)

**2013– 14ஆம் நிதியாண்டில் 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கான தொழிற்பயிற்சியுடன் கூடிய ஆறு இல்லங்களுக்கான செலவின ஒப்பளிப்பு விவரம்.**

**தொடர் செலவினம்** தொகை ரூ.

| | | |
|---|---|---|
| 1. | சமூக பணியாளர் / மேலாளர் / விடுதிக் காப்பாளர் / முதுநிலை பயிற்சியாளர் / கணினி இயக்குபவர் மதிப்பூதியம்<br>ரூ.6,000/– x 1 நபர் x 12 மாதங்கள் | ரூ.72,000/– |
| 2. | காப்பாளர்<br>ரூ.5,000/– x 1 நபர்கள் x 12 மாதங்கள் | ரூ.60,000/– |
| 3. | சமையலர்<br>ரூ.3,000/– x 1 நபர் x 12 மாதங்கள் | ரூ.36,000/– |
| 4. | உதவி சமையலர்<br>ரூ.2,000/– x 1 நபர் x 12 மாதங்கள் | ரூ.24,000/– |
| 5. | இரவுக் காவலர்<br>ரூ.4,000/– x 1 நபர் x 12 மாதங்கள் | ரூ.48,000/– |
| 6. | தொழிற் பயிற்றுநர்கள்<br>ரூ.6,000/– x 2 நபர்கள் x 12 மாதங்கள் | ரூ.1,44,000/– |
| 7. | துப்புரவு பணியாளர்<br>ரூ.2,000/– x 1 நபர் x 12 மாதங்கள் | ரூ.24,000/– |
| 8. | உணவூட்டுச் செலவினம்<br>ரூ.650/– ஒரு மாதத்திற்கு x 40 நபர்கள் x 12 மாதங்கள் | ரூ.3,12,000/– |
| 9. | உடைகள் (வருடத்திற்கு 2 செட்)<br>ரூ.500/– x 40 நபர்கள் x 2 செட் | ரூ.40,000/– |
| 10. | வாடகை / கட்டிட பராமரிப்பு (சொந்த கட்டிடம் எனில்) மற்றும் மின் கட்டணம்<br>ரூ.13,000/– x 12 மாதங்கள் | ரூ.1,56,000/– |
| 11. | தொலைபேசி மாதாந்திர கட்டணம்<br>ரூ.1,000/– x 12 மாதங்கள் | ரூ.12,000/– |
| 12. | மருந்துகள் ரூ.1,500/– x 12 மாதங்கள் | ரூ.18,000/– |
| 13. | பாய்கள் மற்றும் தலையணைகள்<br>ரூ.200/– x 40நபர்கள் | ரூ.8,000/– |
| 14. | சோப்பு மற்றும் இதர பொருட்கள்<br>ரூ.50/– x 40 நபர்கள் | ரூ.2,000/– |

| | | |
|---|---|---|
| 15. | சமையல் எரிவாயு ரூ.900/– x 12 மாதங்கள் | ரூ.10,800/– |
| 16. | தோட்டக்கலை / மெழுகுவர்த்தி/பேக்கரி பயிற்சி | 20,000/– |
| | **மொத்தம்** | **ரூ.9,86,800/–** |

| | | |
|---|---|---|
| 1. | ஒரு இல்லத்திற்கான செலவினம் | **ரூ.9,86,800/–** |
| 2. | ஆறு இல்லங்களுக்கான செலவினம்<br>(ரூ.9.,86,800/– x 6) | **ரூ.59,20,800/–** |

(ரூபாய் ஐம்பத்தொன்பது இலட்சத்து இருபதாயிரத்து எண்ணூறு மட்டும்)

பொ. சிவசங்கரன்,
அரசுச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.

# இணைப்பு–II

(அரசாணை(நிலை) எண்.14, மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை, நாள்13–03–2014)

14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கான தொழிற் பயிற்சியுடன் கூடிய ஆண்களுக்கான 10 இல்லங்களுக்கென செலவின ஒப்பளிப்பு விவரம்

| | |
|---|---|
| வயது வரம்பு | 14 வயது மற்றும் அதற்கு மேல் |
| இனம் | ஆண்கள் |

**தொடர் செலவினம்**

| | | |
|---|---|---|
| 1. | சமூக பணியாளர் / மேலாளர் / விடுதிக் காப்பாளர் / முதுநிலை பயிற்சியாளர் / கணினி இயக்குபவர் மதிப்பூதியம்<br>ரூ.6,000/– x 1 நபர் x 12 மாதங்கள் | ரூ.72,000/– |
| 2. | காப்பாளர்<br>ரூ.5,000/– x 1 நபர்கள் x 12 மாதங்கள் | ரூ.60,000/– |
| 3. | சமையலர்<br>ரூ.3,000/– x 1 நபர் x 12 மாதங்கள் | ரூ.36,000/– |
| 4. | உதவி சமையலர்<br>ரூ.2,000/– x 1 நபர் x 12 மாதங்கள் | ரூ.24,000/– |
| 5. | இரவுக் காவலர்<br>ரூ.4,000/– x 1 நபர் x 12 மாதங்கள் | ரூ.48,000/– |
| 6. | தொழிற் பயிற்றுநர்கள்<br>ரூ.6,000/– x 2 நபர்கள் x 12 மாதங்கள் | ரூ.1,44,000/– |
| 7. | துப்புரவு பணியாளர்<br>ரூ.2,000/– x 1 நபர் x 12 மாதங்கள் | ரூ.24,000/– |
| 8. | உணவூட்டுச் செலவினம்<br>ரூ.650/– ஒரு மாதத்திற்கு x 40 நபர்கள் x 12 மாதங்கள் | ரூ.3,12,000/– |
| 9. | உடைகள் (வருடத்திற்கு 2 செட்)<br>ரூ.500/– x 40 நபர்கள் x 2 செட் | ரூ.40,000/– |
| 10. | வாடகை / கட்டிட பராமரிப்பு (சொந்த கட்டிடம் எனில்) மற்றும் மின் கட்டணம்<br>ரூ.13,000/– x 12 மாதங்கள் | ரூ.1,56,000/– |
| 11. | தொலைபேசி மாதாந்திர கட்டணம்<br>ரூ.1,000/– x 12 மாதங்கள் | ரூ.12,000/– |
| 12. | மருந்துகள் ரூ.1,500/– x 12 மாதங்கள் | ரூ.18,000/– |

| | | |
|---|---|---|
| 13. | பாய்கள் மற்றும் தலையணைகள்<br>ரூ.200/– x 40நபர்கள் | ரூ.8,000/– |
| 14. | சோப்பு மற்றும் இதர பொருட்கள்<br>ரூ.50/– x 40 நபர்கள் | ரூ.2,000/– |
| 15. | சமையல் எரிவாயு ரூ.900/– x 12 மாதங்கள் | ரூ.10,800/– |
| | **மொத்தம்** | **ரூ.9,66,800/–** |

| | | |
|---|---|---|
| 1. | ஒரு இல்லத்திற்கான செலவினம் | **ரூ.9,66,800/–** |
| 2. | பத்து இல்லங்களுக்கான செலவினம்<br>(ரூ.9,66,800/– x 10) | **ரூ.96,68,000/–** |

(ரூபாய் தொண்ணூற்று ஆறு இலட்சத்து அறுபத்து எட்டாயிரம் மட்டும்)

பொ. சிவசங்கரன்,
அரசுச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு–III

(அரசாணை(நிலை) எண்14., மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை, நாள்13–03–2014)

14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கான தொழிற் பயிற்சியுடன் கூடிய பெண்களுக்கான 9 இல்லங்களுக்கென செலவின ஒப்பளிப்பு விவரம்.

| | |
|---|---|
| வயது வரம்பு | 14 வயது மற்றும் அதற்கு மேல் |
| இனம் | பெண்கள் |

**தொடர் செலவினம்** **தொகை**

| | | |
|---|---|---|
| 1. | சமூக பணியாளர் / மேலாளர் / விடுதிக் காப்பாளர் / முதுநிலை பயிற்சியாளர் / கணினி இயக்குபவர் மதிப்பூதியம்<br>ரூ.6,000/– x 1 நபர் x 12 மாதங்கள் | ரூ.72,000/– |
| 2. | காப்பாளர்<br>ரூ.5,000/– x 1 நபர்கள் x 12 மாதங்கள் | ரூ.60,000/– |
| 3. | சமையலர்<br>ரூ.3,000/– x 1 நபர் x 12 மாதங்கள் | ரூ.36,000/– |
| 4. | உதவி சமையலர்<br>ரூ.2,000/– x 1 நபர் x 12 மாதங்கள் | ரூ.24,000/– |
| 5. | இரவுக் காவலர்<br>ரூ.4,000/– x 1 நபர் x 12 மாதங்கள் | ரூ.48,000/– |
| 6. | தொழிற் பயிற்றுநர்கள்<br>ரூ.6,000/– x 2 நபர்கள் x 12 மாதங்கள் | ரூ.1,44,000/– |
| 7. | துப்புரவு பணியாளர்<br>ரூ.2,000/– x 1 நபர் x 12 மாதங்கள் | ரூ.24,000/– |
| 8. | உணவூட்டுச் செலவினம்<br>ரூ.650/– ஒரு மாதத்திற்கு x 40 நபர்கள் x 12 மாதங்கள் | ரூ.3,12,000/– |
| 9. | உடைகள் (வருடத்திற்கு 2 செட்)<br>ரூ.500/– x 40 நபர்கள் x 2 செட் | ரூ.40,000/– |
| 10. | வாடகை / கட்டிட பராமரிப்பு (சொந்த கட்டிடம் எனில்) மற்றும் மின் கட்டணம்<br>ரூ.13,000/– x 12 மாதங்கள் | ரூ.1,56,000/– |
| 11. | தொலைபேசி மாதாந்திர கட்டணம்<br>ரூ.1,000/– x 12 மாதங்கள் | ரூ.12,000/– |
| 12. | மருந்துகள் ரூ.1,500/– x 12 மாதங்கள் | ரூ.18,000/– |

| | | |
|---|---|---|
| 13. | பாய்கள் மற்றும் தலையணைகள்<br>ரூ.200/– x 40நபர்கள் | ரூ.8,000/– |
| 14. | சோப்பு மற்றும் இதர பொருட்கள்<br>ரூ.50/– x 40 நபர்கள் | ரூ.2,000/– |
| 15. | சமையல் எரிவாயு ரூ.900/– x 12 மாதங்கள் | ரூ.10,800/– |
| **மொத்தம்** | | **ரூ.9,66,800/–** |

| | | |
|---|---|---|
| 1. | ஒரு இல்லத்திற்கான செலவினம் | **ரூ.9,66,800/–** |
| 2. | ஒன்பது இல்லங்களுக்கான செலவினம்<br>**(ரூ.9,66,800/– x 9)** | **ரூ.87,01,200/–** |

(ரூபாய் எண்பத்து ஏழு இலட்சத்து ஆயிரத்து இருநூறு மட்டும்)

**சுருக்கம்**

| | | |
|---|---|---|
| 1. | 6 மனவளர்ச்சி குன்றியோருக்கான இல்லங்களுக்கான செலவின ஒப்பளிப்பு. | ரூ.59,20,800/– |
| 2. | மனவளர்ச்சி குன்றிய ஆண்களுக்கான பத்து இல்லங்களுக்கான செலவின ஒப்பளிப்பு. | ரூ.96,68,000/– |
| 3. | மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான ஒன்பது இல்லங்களுக்கான செலவின ஒப்பளிப்பு. | ரூ.87,01,200/– |
| **மொத்தம்** | | **ரூ.2,42,90,000/–** |

(ரூபாய் இரண்டு கோடியே நாற்பத்து இரண்டு இலட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்.)

பொ. சிவசங்கரன்,
அரசுச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.